FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற விசாரணை முறை சட்டம் 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069067

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் மகளிர் காவல்நிலையம் Year: ஆண்டு 2025 FIR No.: முத.அ. எண் 4/2025 Date: நாள் 30.10.2025

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7 of the Prevention of corruption Act, 1988 as amended by the Prevention of corruption (Amendment) Act, 2018

(ii) Act சட்டம்:

(iii) Act சட்டம்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 28.10.2025 Date to : நாள் வரை 29.10.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை 13.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2025 Time : நேரம் 10.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.10.2025 Time : நேரம் 18.00 hrs. 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் கட்டுக்கு வரையப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 35 கி.மி. தான் மேற்கே

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி நாகப்பட்டினம் மாவட்டத்து திருமலை வட்டாட்சியர் அலுவலக வட்ட வழங்கல் அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S.K. நடராஜன்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கவேல்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31/2025

(d) Nationality நாட்டினம் இந்தியா

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தலைமை ஆசிரியர்

(g) Address : முகவரி 4/153, மஞ்சு கோட்டகம், மெயின் ரோட், திருமருகல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு மணி. மாதிரியான், வட்ட வழங்கல் அலுவலர், திருமலை, நாகப்பட்டினம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- எதிரியாளி காண்டகம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- இல்லை -

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 30.10.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப் பிரிவு காவல் ஆய்வாளர் G.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது திரு.S.K.ரமேஷ், வயது.31/2025, த/பெ.சக்திவேல், 4/58, மஞ்சுகோட்டகம், இடையூர் போஸ்ட், திருத்துறைபூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகிய கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு: 30.10.2025 அனுப்புதல், S.ரமேஷ், த/பெ.சக்திவேல், 4/58, மஞ்சுகோட்டகம், இடையூர் போஸ்ட், திருத்துறைபூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். பெறுதல், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, நாகப்பட்டினம். அய்யா, நான் திருவாரூர் மாவட்டம் மஞ்சுகோட்டகம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.Sc. Hotel Management படித்துள்ளேன். வேளாங்கண்ணியில் தனியார் ஓட்டலில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தங்கை அனுசியாவை நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை தாலுக்கா, பன்னைதெரு என்ற கிராமத்தில் விக்னேஷ் என்பவருக்கு கடந்த 05 ஏப்ரல் 2023 ல் திருமணம் செய்து கொடுத்தோம். என் தங்கை அனுசியா தனி ரேசன் கார்டு வாங்கவேண்டும் என சொன்னார், என் மைத்துனர் விக்னேஷ் வேலைக்கு சென்றிருந்ததாலும், என் தங்கை கைக்குழந்தையுடன் இருந்ததால், நான் என் தங்கை அனுசியாவை அழைத்துக்கொண்டு 28.10.2025 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திருக்குவளை வட்டாட்சியர் அலுவலகம் சென்று, வட்ட வழங்கல் அலுவலகத்தில் இருந்த திருமதி.பாக்கியவதி, வட்ட வழங்கல் அலுவலரிடம் விசாரித்தோம், அப்போது அவர் எங்களிடம் விவரங்களை கேட்டு, அவரது

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30.10.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாள் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் ரேகைப் பதிவு G.Ramesh 30/10/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2025

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை .....No. என் .....
INSPECTOR OF POLICE
Vigilance and Anti Corruption
Nagapattinam.

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-

அலுவலகத்திலேயே ஆன்லைனில் பதிவு செய்து விட்டு, வேலையை முடித்து கொடுத்து விடுகிறேன் ரூபாய் 2000/- பணம் கொடுங்கள் என்று கேட்டார், நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி பன்னி எடுத்துக்கொண்டு அவருக்கு போன் செய்துவிட்டு வரும்படி கூறி அவரது செல்போன் நம்பர் 8220959687யை என்னிடம் கொடுத்தார், அதன்படி நான் மதியம் சுமார் 3.30 மணியளவில் எனது செல்போன் நம்பர் 7094635664 லிருந்து அவரது செல்போனுக்கு பேசியபோது, தான் நீர்முளை அங்காடியில் இருப்பதாகவும், அங்கு வரும்படி தெரிவித்தார். நான் அவரிடம் செல்போனில் பேசிகொண்டு, அவர் இருக்கும் இடம் தெரிந்து கொண்டு, அங்கு சென்று என்னிடம் அப்போதிருந்த ரூபாய் 500/- கொடுத்து, இவ்வளவுதாம்மா என்னிடம் பணம் இருக்கு, இதை வைத்துக்கொண்டு வேலையை முடித்து கொடுங்கள் என்று சொன்னேன், அதற்கு அவர் ஆன்லைனில் பதிவு செய்ததற்காக ரூ.200/- எடுத்துக்கொண்டு, மீதம் 300 ரூபாயை என்னிடம் திருப்பி கொடுத்து விட்டு, நான் கேட்ட 2000/- ரூபாயில் 500 ரூபாய் குறைத்துக்கொண்டு, ரூபாய் 1500/- பணம் எனக்கு கொடுத்து விடுங்கள் உங்கள் தங்கையின் புதிய ரேசன்கார்டு விண்ணப்பத்தை ஆன்லைனில் அப்புருவல் செய்கிறேன், நாளை போன் செய்துவிட்டு ரூபாய் 1500/- பணத்தை கொண்டுவந்து கொடுங்கள் என்று கூறினார். அதற்கு நான் பார்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டேன், அதன்படி நான் 29.10.2025 காலை சுமார் 08.00 மணிக்கு அவரை செல்போனில் தொடர்பு கொண்டபோது, பிசியாக இருந்தது, பிறகு அவரே என் செல்போனில் தொடர்புகொண்டார், அப்போது நான் என் தங்கையின் புதிய ரேசன்கார்டு விண்ணப்பத்தை ஆன்லைனில் அப்புருவல் செய்து விட்டீர்களா என கேட்டேன், அதற்கு அவர் வேலையாக இருப்பதாகவும், மதியம் போல் போன் செய்யும்படியும் சொன்னார். அதன்படி நான் அன்று மதியம் சுமார் 01.50 மணியளவில் வட்ட வழங்கல் அலுவலர் திருமதிபாக்கியவதி அவர்களை அவரது செல்போனில் தொடர்பு கொண்டு, என் தங்கையின் புதிய ரேசன்கார்டு விண்ணப்பத்தை ஆன்லைனில் அப்புருவல் செய்துவிட்டீர்களா என கேட்டேன், அதற்கு அவர் தான் கேட்ட பணம் ரூபாய் 1500/- கொண்டு வந்து கொடுங்கள், பிறகு அப்ரூவல் செய்கிறேன் என்று சொன்னார். என் தங்கை பெயரில் விண்ணப்பம் செய்த புதிய ரேசன்கார்டு விண்ணப்பத்தை ஆன்லைனில் அப்புருவல் செய்ய திருக்குவளை வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள் லஞ்சமாக கேட்ட ரூபாய் 1500/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே திருக்குவளை வட்ட வழங்கல் அலுவலர் திருமதிபாக்கியவதி அவர்கள் என்னிடம் கேட்ட லஞ்சப் பணம் ரூ.1500/- ஐ ஏற்பாடு செய்து கொண்டு வந்து, என் தங்கை அனுசியா பெயரில் விண்ணப்பம் செய்த புதிய ரேசன்கார்டு விண்ணப்பத்தை ஆன்லைனில் அப்புருவல் செய்து, புதிய கார்டு வழங்க, என்னிடம் லஞ்சம் கேட்ட திருக்குவளை வட்ட வழங்கல் அலுவலர் திருமதிபாக்கியவதி அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி இந்த புகாரினை கொடுக்கிறேன். இந்துடன் நான் என் தங்கை அனுசியா பெயரில் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்த புதிய அட்டைக்கான விண்ணப்ப நகலினை இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) S.K.Ramesh. 30/10/25

SUBMITTED Hon'ble Sir, Received this computer typed written complaint from the complainant on 30.10.2025 at 10.00 hours, and verified the antecedents of the Accused Officer and ascertained its genuineness of the complaint through sources, after that registered a case on the complaint on

30.10.2025 at 11.00 hours in Nagapattinam Vigilance and Anti-Corruption Detachment **Crime No.4/2025**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018.

30.10.2025

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

I am submitting the Original F.I.R, along with the complaint and annexure to the Hon'ble Court of the District and Sessions Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

30.10.2025

(G.RAMESH KUMAR)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.